**தேதி :** 30.06.2026 CC.No.: 183/2017 PW :2 சண்முகத்தாய்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

பஸ்சை யார் ஓட்டி வந்தார்கள் என்றால் எதிரி தான் ஓட்டி வந்தார். எனக்கு முன்னால் சென்ற பைக்கில் யார், யார் சென்றார்கள் என்றால் அவர்கள் பெயர் தற்போது ஞாபகமில்லை. இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்த நபர்கள் எங்கள் பைக் மீது மோதினார்கள். அந்த பைக்கின் பின்புறம் சேதாரம் இருந்தது என்றால் சரிதான். எங்களுடைய பைக்கின் முன்பக்கம் சேதாரம் இருந்தது என்றால் எல்லா இடமும் இருந்தது. என்னுடைய வாகனத்திற்கும், முன்னால் சென்ற வாகனத்திற்கும் எவ்வளவு தூரம் இடைவெளி இருக்கும் என்றால் இருசக்கரவாகனத்தில் வந்த நபர்கள் மீது பஸ் வேகமாக வந்து மோதி இருசக்கரவாகனம் எங்கள் மீது மோதியது. இடைவெளி எவ்வளவு இருக்கும் என்றால் மிக அருகில் தான் வந்தார்கள். பைக்கும், பஸ்சும் நேரடியாக மோதியதா? என்றால் பஸ் அந்த பைக்கை தட்டியது. அந்த பஸ்சின் முன்பகுதியில் சேதாரம் இருந்ததா? என்றால் இருந்தது.

இறந்து போன நபரின் தலையில் வண்டியின் டயர் ஏறி, இறங்கியதா? என்றால் இல்லை. பஸ்சை ஓட்டி வந்த நபரின் பெயர் எனக்கு தெரியுமா? என்றால் எனக்கு தெரியும். சம்பவயிடத்திலேயே கண்ணன் என பேசிக்கொண்டார்கள். பஸ் சம்பவத்திற்கு பிறகு அந்த இடத்தில் நின்றதா? என்றால் எனக்கு

ஞாபகமில்லை. என்னுடைய பைக் சம்பவயிடத்தில் தான் கிடந்தது. ஒரு மாதம் கழித்து தான் கொடுத்தார்கள். எனக்கு முன்னால் சென்ற பைக்கும், சம்பவயிடத்தில் தான் கிடந்தது. அந்த பைக்கில் உள்ள கண்ணாடியும், எங்கள் பைக்கில் உள்ள கண்ணாடியும் உடைந்து சம்பவயிடத்தில் கிடந்தது என்றால் சரிதான். கெல்மேட் உடைந்ததா? என்றால் தலையில் ஹெல்மெட் இருந்தது. போலீசார் என்னை டிரைவரை அடையாளம் காட்ட சொல்லவில்லை என்றால் சரிதான்.

விபத்திற்கு பிறகு அவர்களின் பைக் அங்கு தான் கிடந்தது என்றால் சரிதான். எங்களுடைய பைக்கும் அங்கு தான் கிடந்தது. எங்களுடைய பைக் முழுவதுமாக சேதமடைந்தது. சம்பவம் நடந்த இடத்தில் இரத்தக்கறைகள் இருந்தது. சம்பவயிடத்தில் நிறைய நபர்கள் கூடினார்கள். சம்பவம் நடந்தவுடன் ஒரு நொடியில் கூடினார்கள்.

மருத்துவர் என்னை விசாரித்தபோது, பைக் மோதியதினால் காயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் பஸ் தட்டி பைக் மீது மோதி, அந்த பைக் எங்கள் மீது மோதியதாக சொல்லியுள்ளேன்.

எனது கணவர் தான் அஜாக்கிரதையாக வண்டியை வேகமாக ஓட்டி, முன்னால் சென்ற இருசக்கரவாகனத்தின் பின்பக்கம் மோதி இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதில் தான் எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் நஷ்டஈடு வாங்கவில்லை. வழக்கு நிலுவையில் உள்ளது. நான்

நஷ்டஈடு வாங்குவதற்காக வேண்டி, நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.02 11:05:49 +0530